மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU B. VENKATASWAMY: In Dharmapuri district, especially in Hosur taluk, there is a large potentiality to rear good variety of sheep. We passed also a resolution in the Dharmapuri District Development Council one year back. Will the Government come forward to open a co-operative sheep credit society in Dharmapuri district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 25 சங்கங்கள் ஏற்படுத்தவேண்டுமென்று அரசாங்கம் யோசித்துக் சொண்டிருக்கிறது. முடிவெடுக்கும்போது அதைப் பற்றி யோசிக்கலாம்.

Supply of sugar in mofussil areas.

*247 Q.—THIRU K. VINAYAGAM: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state:

(a) Whether a family holding a card for 6 kilos of sugar has been issued only half a kilo in November and December in 1968 in mofussil areas; and

(b) whether extra sugar was not supplied for Deepavali, Ramzan and Christmas in mofussil areas?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை, ஐயா.

(இ) தீபாவளி, ரம்ஜான், கிருஸ்துமஸ் ஆகிய பண்டிகைகளுக்குத் தனி அளவு சர்க்கரை வினியோகிக்கப்பட்டது.

THIRU K. VINAYAKAM: Sir, was there not a notification from the Food Department that in these months of November and December 1968 families which were entitled to get six kilos of sugar were not given that quantity but were given only half a kilo? I am referring to the months of November and December and not the entire period. Was not a notification issued by the Food Department for which the Minister is responsible?

THE HON. THIRU P. U. SHANMUGAM: I do not have the figures. I am not aware of any notification. I kindly request the hon. Member to give separate notice.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, தீபாவளி, ரம்ஜான், கிருஸ்துமஸ் ஆகிய பண்டிகைகளில் நம்முடைய அரசு விசேஷமாக சீனி வழங்கிவருகிறது. பண்டிகைகளுக்கு ஒரு வார காலத்திற்கு முன்னர் கிடைக்குமாறு செய்தால், மக்களுக்கு உதவியாக இருக்கும் என்பதை அடிப்படையாக

1969 செப்டம்பர் 12]

வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இருக்கின்ற ஸ்டாக்கைக் கணக்கில் எடுத்து, காலதாமதம் இல்லாமல், ஒரு வாரத்திற்கு முன்னதாகவே வழங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏறக்குறைய ஒரு வாரத்திற்கு முன்பாகத்தான் அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அப்படித்தான் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஏதாவது காலதாமதம் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதுபற்றிக் கவனிக்கலாம்.

சிதம்பரம் நகரில் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்

* 248 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

சிதம்பரம் டவுனில் வாடகை கட்டடத்தில் இருக்கும் கால்நடை மருத்துவ மனைக்கு அரசாங்க கட்டடம் கட்ட திட்டமுண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை, ஐயா.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சிதம்பரம் தாலுகா பெரிய தாலுகா. அதிலும் பெரிய முனிசிபாலிடி. ஏராளமான கால்நடைகள் இருக்கின்றன. இப்போது இருக்கும் வாடகைக் கட்டடம் சிறு கட்டடமாக இருக்கிறது. ஆகவே, நல்ல ஒரு கட்டடத்தைக் கட்டி கால்நடைகளின் உபயோகத்திற்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நகராட்சிப் பகுதிகளில் கால்நடை மருந்தகம் கட்டுவதற்கு மானியமோ அல்லது கடனோ அரசு வழங்குவது இல்லை. கிராமப் புறங்களில் கட்டுவதற்குத்தான் 30,000 ரூபாய் வரை வேளாண்மைத் துறையின்கீழ் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, நகராட்சிப் பகுதிகளில் அந்தந்த நகராட்சியின் நிதிநிலையைப் பொருத்து அவர்களே கட்டடங்களைக் கட்டிக் கொள்ளலாம்.

Vaigai Irrigation Scheme.

* 249 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) Whether the Vaigai Irrigation Scheme has been remodelled;

(b) if so, at what cost; and

(c) what are its special features?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மன்றத்தின் முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* 174-175-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.